www.padippakam.com



# கண்ணசாமியின் தோல்வியும் கண்டியின் வீழ்ச்சியும்




46

ஆங்கிலேயர்களுக்கும் ஒல்லாந்தர்களுக்கும் இடையில் மத வேறுபாடு இருந்ததால் யாழ்குடாநாட்டில் ஒல்லாந்தர்களால் கட்டப்பட்ட தேவாலயங்கள் கவனிப்பாரற்ற நிலையில் சீரழிந்து போகவிடப் பட்டன. கி.பி 1801-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் திகதி கிறிஸ்ரியன், தாவீது பாதிரியார் பொறுப்பேற்கும் வரை, யாழ்ப் பாணம் சுண்டுக்குளியிலிருந்த தேவாலயம் அப்போது ஆங்கி லேயத் தளபதியாக இருந்த கேர்ணல் பார்பெற்றின் ஆட்டுக் கொட்டிலாக விளங்கியது.



1804-ம் ஆண்டு பார்பெற் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து வெளியேறி தற்போதைய யாழ்ப்பாணச் செயலகத்தின் பழைய பூங்காவில் தனது வசிப் பிடத்தை அமைத்துக்கொண் டான். இதனால் யாழ்க்கோட் டையும் அதற்குள் இருந்த தேவாலயமும் முக்கியத்து வத்தை இழந்தன.

ஆங்கிலேயர்கள் யாழ்ப்பா ணத்தையும் மட்டக்களப்பு, திரு கோணமலை மற்றும் கோட்டை காலிப் பகுதிகளைக் கைப்பற் றிய அதே காலப்பகுதியில் அதா வது கி.பி 1797-ல் கண்டி மன்னன் இராஜசிங்கன் இறந்ததும் அவ னுக்கு வாரிசு இல்லாததால் அங்கு நடைபெற்ற சிம்மாசனப் போட்டியில் கண்ணசாமி என் பவன் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் என்னும் பெயருடன் கண்டி யின் மன்னனாக முடிதரித் தான்.

காலஞ்சென்ற மன்னன் இராஜசிங்கனின் மனைவி வழி யில் கண்டியின் முடிக்குரிய வாரிசாக இருந்த முத்துசாமி, கண்ணசாமியுடன் ஏற்பட்ட சிம்மாசனப் போட்டியில் தோல்வியடைந்து கொழும்புக் குத் தப்பியோடி ஆங்கிலேயரி டம் சரணடைந்தான். அவர் கள் அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் யாழ்ப்பா ணக் கோட்டைக்கு அனுப்பி அங்குள்ள மாளிகை ஒன்றில் தங்க வைத்தனர்.

1803-ம் ஆண்டு தொடக்கத் தில் ஆங்கிலேயர்கள் கண்டி மீது தங்களது முதலாவது படை யெடுப்பை நடத்தினார்கள். அதில் தற்காலிகமாகத் தோல் வியடைந்த ஸ்ரீவிக்கிரம இராஜ சிங்கன் பெரிய இழப்புக்கள் எது வுமின்றி தனது படைகளுடன் கண்டி நகரத்தை விட்டுப் பின் வாங்கினான். கண்டி தங்களது கைகளுக்கு வந்துவிட்டது என்று நினைத்துப் பெருமிதமடைந்த ஆங்கிலேயர்கள் தங்களின் பரா மரிப்பிலிருந்த முத்துசாமியை அதற்கு மன்னனாக்கினார்கள். ஆனால் முத்துசாமியின் ஆட்சி நீண்ட நாள் நிலைக்கவில்லை. போதிய போக்குவரத்துப் பாதை கள் இன்மையாலும் காலநிலை மாற்றத்தாலும் அடிக்கடி பர விய தொற்று நோய்களாலும் ஆங்கிலேயப் படைகளால் தொடர்ந்து முத்துசாமிக்கு உதவ முடியவில்லை. 1803ம் ஆண்டு ஜுன் மாதம் 24ம் திகதி ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் மகாவலிக்கரையில் வைத்து ஆங் கிலேயப்படைகளை அழித்து கண்டியை மீளவும் கைப்பற்றிக் கொண்டான்.

முதலாம் கண்டி யுத்தம் என்று அழைக்கப்படும் இந்த யுத்தத்தில் ஸ்ரீவிக்கிரமராஜ சிங் கன் வெற்றி பெற்றாலும் கண் டியில் அவனுக்கெதிரான உட் பூசல்களும் குழப்பங்களும் நிறையவே இருந்தன. முன்பு சிம்மாசனப்போட்டி நடந்த காலத்தில் ஸ்ரீவிக்கிரமராஜசிங்க னுக்கு ஆதரவாக இருந்து அவன் முடிசூடுவதற்கு காரணமாக இருந்த பிலிமத்தலாவை என்ற கண்டியப் பிரதானி பிற்காலத் தில் பதவியைத் தான் கைப்பற் றும் நோக்கில் அவனுக்கெதி ரான சதி நடவடிக்கைகளில் ஈடு பட ஆரம்பித்தான். ஆங்கிலே யப் படைகள் கண்டிக்கு வந்த போது அதற்கு வேண்டிய ஏற் பாடுகளை இரகசியமாக பிலி மத்தலாவை செய்திருக்கலாம் என்று ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் சந்தேகப்பட்டான்.

தொடர்ந்து பிலிமத்தலாவை யின் சதிச் செயல்கள் அதிகரித் துச் செல்ல 1811ம் ஆண்டில் இராஜத்துரோகக் குற்றத்திற் காக அவனது தலை வெட்டப் பட்டது.

அதன்பின் அவனது இடத் துக்கு ஹெலப்பொல என்ப வன் நியமிக்கப்பட்டான். அவ னும் சிறிது காலம் விக்கிரம ராஜ சிங்கனுக்கு உதவுபவன் போல நடந்து கொண்டுவிட்டு, பின்னர் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து சதி முயற்சியில் இரகசி யமாக ஈடுபட ஆரம்பித்தான்.

சிங்களம் நன்கு பேசத் தெரிந்த டொயிலி என்ற ஆங்கி லேய சிவில் அதிகாரியுடன் தொடர்பு வைத்துக் கொண்ட அவன், ஸ்ரீவிக்கிரம ராஜசிங்க னுடைய செயற்பாடுகள் பற்றி அடிக்கடி அவர்களுக்கு தகவல் கொடுத்து வந்தான். இந்த விடயம் ஸ்ரீவிக்கிரமராஜசிங்க னுக்கு தெரிய வர, எஹலப் பொலவுக்கு தலை கொய்யப் பட்டது போல் தனக்கும் வெட் டப்படாமல் தடுப்பதற்காக தனது பகுதி மக்களை மன்ன னுக்கு எதிராக கிழர்ந்தெழச் செய்தான். ஆனால், அந்தக் கிளர்ச்சி அடக்கப்பட்டுவிட அவன் அங்கிருந்து தப்பி ஓடி ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டான்.

1814-ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதி அவன் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொண்டதாக தெரியவருகிறது. அவன் கொடுத்த தகவலின் பேரிலும், ஊக்கத்தின் பேரிலும் ஆங்கிலே யர்கள் 1815-ம் ஆண்டு இரண் டாம் கண்டி யுத்தத்தைத் தொடுத்தனர்.

இந்த யுத்தத்தில் ஸ்ரீவிக்கிரம ராஜ சிங்கன் கைது செய்யப் பட கண்டி இராச்சியம் ஆங் கிலேயர் வசமானது.

> **முதலாம் கண்டி யுத்தம் என்று அழைக்கப்படும் இந்த யுத்தத்தில் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் வெற்றி பெற்றாலும் கண்டியில் அவனுக்கெதிரான உட்பூசல்களும் குழப்பங்களும் நிறையவே இருந்தன. முன்பு சிம்மாசனப்போட்டி நடந்த காலத்தில் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனுக்கு ஆதரவாக இருந்து அவன் முடிசூடுவதற்கு காரணமாக இருந்த பிலிமத்தலாவை என்ற கண்டியப் பிரதானி பிற்காலத்தில் பதவியைத் தான் கைப்பற்றும் நோக்கில் அவனுக்கெதிரான சதி நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தான்.**

1815-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் திகதி ஆங்கிலேயத் தளபதி யான பிரவுண்றிக் கண்டி அர சவை மண்டபத்தில் வைத்து கண்டியப் பிரதானிகளின் சர ணாகதி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, பிரித்தானிய மன்னர், மூன்றாம் ஜோர்ச்சின் ஆட் சியை அங்கே பிரகடனம் செய் தான்.

கைது செய்யப்பட்ட மன் னன் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனும் அவனது குடும்பத்தினரும் வேலூர் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (அவர்கள் விடுதலை செய்யப்படாமலே வேலூர் சிறையில் மடிந்ததாக தமிழக வரலாற்றுக் குறிப்புக் கள் தெரிவிக்கின்றன.)

கண்டியின் வீழ்ச்சியோடு, இலங்கை முழுவதும் வன்னியின் ஒருபகுதி தவிர ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தாலும் அவர்களால் எல்லா இடங்க ளையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர முடிய வில்லை. யாழ்ப்பாணமும், வன்னியும் ஒரு நிர்வாகத்தின் கீழும், கொழும்பும், காலியும் பிறிதொரு நிர்வாகத்தின் கீழும் கண்டி தனியான நிர்வாகத்தின் கீழும் இருந்து வந்த அக்கால கட்டத்தில் மூன்று இனப் பிரிவினர் அங்கே வாழ்ந்து வந்தார்கள் ஒன்று தமிழர்கள், மற்றையது கரையோரச் சிங்கள வர்கள் அடுத்தது கண்டியச் சிங் களவர்களாவர். இதில் கண்டி யச் சிங்களவர்களும், கரையோ ரச் சிங்களவர்களும் ஒரே மொழி யைப் பேசுபவர்களாக இருந் தாலும், அவர்களுக்கிடையே யான முரண்பாடு மிகப் பெரி யதாக இருந்தது. கண்டியச் சிங் களவர்கள் பெரும்பாலும் யாழ் -ப்பாணத் தமிழர்களுடனும், தென்னியத் தமிழர்களுடனும் திருமண உறவுகள் வைத்துக் கொண்டனர். ஆனால், கரை யோரச் சிங்களவர்களுடன் அவ்வாறு திருமண உறவுகளை வைத்துக் கொள்வதை அவர் கள் மிகக் கேவலமானதாக நினைத்தார்கள்.

- நக்கீரன்

படிப்பகம்